மாவட்ட நகர் - ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்
விருதுநகர் உள்ளுர் திட்டக் குழுமம்
கூரைக்குண்டு ஊராட்சி

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், கூரைக்குண்டு ஊராட்சி,கோட்டைப்பட்டி கிராமம், சர்வே எண்:-286/2ஏ2, 287/1ஏ1,287/1ஏ2,அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்ட பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : **81DA1S9S**

அளவு : 1 : 400

வ

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் மொத்தப் பரப்பளவு = 2.30ஏக்கர் (9335.0ச.மீ)

மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட = (2738.23ச.மீ)

மீதமுள்ள மனையிடங்களின் பரப்பளவு = (6596.77ச.மீ)

மனைப்பிரிவு இடத்தின் எல்லை =

நிலையிலுள்ள சாலை =

கோரிய மனைகளின் எண்ணிக்கை = 49 எண்ணம்

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை :

மனை எண்கள் 01 முதல் 49 வரை = 49 எண்ணம்

பொது ஒதுக்கீடு:- (தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதநிக்கை ந.க. எண்:4367/2019 நாள்:05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் TNCDBR-2019 பிரிவு 47(6) ன்படி 10% பூங்கா பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பின்படி கட்டணத்தினை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

உத்தேச சாலை ஆவண.எண்:141/2026(நாள்:-08-01-2026) = 2738.23ச.மீ

உள்ளாட்சி உபயோகத்திற்கு ஆவண.எண்:141/2026(நாள்:-08-01-2026) = 34.0ச.மீ (0.51%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) ஆவண.எண்:140/2026(நாள்:-08-01-2026) = 34.40ச.மீ (0.52%)

கட்டட வரம்பு:

7.20மீ அகலச்சாலைகளுக்கு 1.50மீ விட்டபட வேண்டும்.

10.0மீ (மு) 12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ விட்டபட வேண்டும்.

மூலை முடக்கு:

10.0மீ முதல் 12.0மீ வரை அகலச்சாலைகளுக்கு 3.0மீ X 3.0மீ விட்டபட வேண்டும்.

நிபந்தனைகள்:

1).அரசாணை எண். 18,நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019 -ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

2) அரசாணை எண். 16,நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020 -ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

3) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சிக்கு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்படாமல் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.

5) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வசார்ச்சி டிசம்பர் உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதி மன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7) நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த விதி மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு துழைவாயிலில் 6'x 4' -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

9) நீதி மன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இந்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

10) இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட கூடாது. கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.

குறிப்பு :

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/உ.செ.(விஉதிகு)எண்: 02/2026

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்
விருதுநகர் உள்ளுர் திட்டக் குழுமம்
விருதுநகர்



அளவ

வரைவாளர் நிலை-3

மு.பாரதி
மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்

Signature valid
Signed by: Deputy Di...
Location:Virudhuna...
Date:202...03.03 ...:01

Signature valid
Signed by: Village Pa... ...t President
Location: Krudhun...
Date:2... 3.16 ...:53